செய்தி வெளியீடு எண். 31-2016 நாள்: 17.09.2016

# விழுப்புரம் மாவட்டம் 2016- வடகிழக்கு பருவமழையின் போது மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

******

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், 2016- வடகிழக்கு பருவமழையின் போது மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (17.09.2016) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் பேசியதாவது:

வடகிழக்கு பருவமழையின்போது நமக்கு தொடர்புடைய அனைத்து முக்கிய துறைகள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் தொலைபேசி எண்களை அனைத்து அலுவலர்களும் சேகரித்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

காவல்துறையினரும், தீயணைப்புத் துறையினரும், பருவ மழை காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து செயல்முறை விளக்கங்களை பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு செய்து காட்ட வேண்டும். காவல் துறையில் உள்ள கம்பியில்லா தகவல் முறையை பருவ மழை காலங்களில் வருவாய்த் துறையினர் பயன்படுத்திக்கொள்ள ஆவண செய்ய வேண்டும்.

தீயணைப்புத் துறையினர் ரப்பர் படகுகள் உள்ளிட்ட மீட்பு படகுகளை சரிபார்த்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பொதுப்பணித்துறையினர் புயல் பாதுகாப்பு இல்லங்கள், பள்ளி கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள் மற்றும் தனியார் கல்யாண மண்டபங்கள் ஆகியவற்றில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை தேவைப்படும்போது தங்க வைப்பதற்கு தகுதியானவைகளை தேர்ந்தெடுத்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். தேர்வு செய்யப்படும் கட்டிடங்களில் மின்வசதி மற்றும் குடிநீர் வசதி ஆகியவற்றை ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மழை வெள்ளக் காலங்களில் நீர் அடைப்பு ஏற்படாமல் இருப்பதற்கு நீர்நிலை புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை வேறு இடத்தில் தங்க வைக்கவம், பொதுப்பணித்துறையினரும், வருவாய்த்துறையினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுப்பணித்துறையின் நீர் ஆதார அமைப்பின் வடிகால் கோட்ட அலுவலர்கள் உடைப்பு மற்றும் வெள்ளப்பெருக்கை தடுப்பதற்காக மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

நெடுஞ்சாலைத்துறையினர் சாலைகளில் மரங்கள் விழுதல், மின் கம்பிகள் அறுந்து விழுதல், மின் கம்பங்கள் சாய்தல் போன்றவற்றை உடனுக்குடன் சரிசெய்து சீரான போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் புல்டோசர்கள், ஜே.சி.பி. இயந்திரங்களை நல்ல நிலையில் தயாராக வைத்திருக்க வேண்டும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக அலுவலர்களும், கூட்டுறவுத்துறை அலுவலர்களும், மாவட்ட, வட்ட வழங்கல் அலுவலர்களும் நியாயவிலைக் கடைகளில் போதிய அளவில் உணவு பொருட்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும். மேலும், பெட்ரோல், டீசல், எல்.பி.ஜி. எரிவாயு உள்ளிட்டவைகள் அந்தந்த விற்பனை மையங்களில் போதிய அளவில் இருப்பு (Stock) உள்ளதா என்பதை அலுவலர்கள் ஆய்வு செய்திட வேண்டும்.

புயல், மழை, வெள்ளம் குறித்த தகவல்களை கிராம சபை கூட்டத்தில் ஊர் மக்களுக்கு தெரிவித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குளங்கள், ஏரிகள், குட்டைகள் ஆகியவற்றை உடைப்பு ஏற்படாமல் பாதுகாப்பு தன்மையுடன் உறுதியுடன் உள்ளதா என்பதை முன்கூட்டியே ஆய்வு செய்து சரிபார்த்திட வேண்டும்.

சுகாதாரத்துறையினர் மழை வெள்ளக் காலங்களில் ஏற்படும் தொற்று நோய்கள் மற்றும் இதர நோய்களுக்கு ஏற்றபடி போதுமான அளவு மருந்துகளை இருப்பில் வைத்திருக்க வேண்டும். மேலும் ஜெனரேட்டர்கள், ஆம்புலன்ஸ் வாகனங்கள் இயங்கும் நிலையில் தயாராக இருக்க வேண்டும். மருத்துவர்கள் விடுப்பில் செல்லாமல் சுழற்சி முறையில் தொடர்ந்து பணியில் இருக்க வேண்டும்.

கால்நடை பராமரிப்புத் துறையினர் கால்நடைகளுக்கு தேவையான மருந்துகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். போக்குவரத்து துறையில் உள்ள அனைத்து வாகனங்களையும் பழுதுகள் சரிபார்த்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

அனைத்துத் துறை அலுவலர்களும் அவசர காலத்தில் விடுப்பில் செல்லாமல் உரிய மக்கள் பணியாற்றி அரசுக்கு உதவியாக இருந்திட வேண்டும். இவ்வாறு மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில், மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர்.இரா.இலட்சுமணன், பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர்.க.காமராஜ், சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.பிரபு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.நரேந்திரன்நாயர்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.ராஜசேகரன், சார் ஆட்சியர் திரு.பி.என்.ஸ்ரீதர்,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.அனுசுயாதேவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் டாக்டர்.மணி, வருவாய் கோட்டாட்சியர்கள் திருமதி.ஜீனத்பானு (விழுப்புரம்), திருமதி.செந்தாமரை (திருக்கோவிலூர்), திரு.சண்முகநாதன் (கள்ளக்குறிச்சி), மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி.அலமேலுவேலு, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ராமதாஸ், செயற்பொறியாளர்கள் திரு.வரதராஜபெருமாள் (கள்ளக்குறிச்சி), திரு.ராஜா (விழுப்புரம்), முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர்.வசந்தாமணி மற்றும் அனைத்து வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், தீயணைப்புத்துறை அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.